2

12 P
2929 (10)
Tamil

राष्ट्रीय अभिलेखागार पुस्तकालय
NATIONAL ARCHIVES LIBRARY
भारत सरकार
Government of India
नई दिल्ली
New Delhi
1090/9/81
आह्वानांक Call No. Tamil
अवाप्ति सं० Acc. No. 2429

KAMAVU

# கனவு:

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி

All Rights Reserved.

புதுவை,—ஸரஸ்வதி அச்சியந்திரசாலை

1910

NATIONAL ARCHIVES LIBRARY
No 2929
Date 8-3-72
GOVT. OF INDIA

# முகவுரை.

இச்சிறிய செய்யுள் நூல் விநோதார்த்தமாக எழுதப்பட்டது. ஒரு சில பாட்டுகள் இன்பமளிக்கக் கூடியன. பதர் மிகுதியாகக் கலந்திருக்கக்கூடும். இதன் இயல் தலைவன் கூற்றெனப்படும் — அதாவது கதாநாயகன் தனது சரிதையைத் தான் நேராகவே சொல்லும் நடை. அச்சு நேர்த்தியாக விழாதிருப்பது எனது பிழையன்று. நமது நாட்டுச் செல்வர்களின் பிழை. இப் புதிய வழி தமிழறிந்த மேலோர்கள் அங்கீகரிக்கத் தக்கது தானா என்று பார்வையிடும் பொருட்டுச் சிறிய நூலொன்றை முதலில் வெளியிடுகிறேன். இதனைப் பதம்பார்த்து மேலோர் நன்றென்பாராயின், இவ்வழியிலே வேறு பல வெளியாக்குவேன். அனுபவக் குறைவினாலும், ஆற்றற் குறைவினாலும் நேரும் பிழைகளைப் புலவர் பொறுத்தருள் செய்க.

ஆசிரியன்.

சாதாரண (1910) ௵ ஆவணி ௴ }
புதுச்சேரி }

ஓம்

# கனவு

பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய்
மெல்லப் போனதுவே—

(பட்டினத்துப்பிள்ளை)

வாழ்வு முற்றுங் கனவெனக் கூறிய
மறைவ லோர்த முரை பிழை யன்றுகாண்.
தாழ்வு பெற்ற புவித்தலக் கோலங்கள்
சரத மன்றெனல் யானு மறிகுவேன்
பாழ் கடந்த பரநிலை யென்றவர்
பகரு மந்நிலை பார்த்திலன் பார்மிசை
ஊழ்கடந்து வருவது மொன்றுண்டோ?
உண்மை தன்னிலவர் பாதி புணர்ந்திட்டேன். (1)

மாயை பொய்யெனல் முற்றிலுங் கண்டனன்
மற்ற மீந்த பிரமத் தியல்பினை
ஆய நல்லருள் பெற்றிலன் தன்னுடை
அறிவி னுக்குப் புலப்பட லின்றியே
தேய மீதெவரோ சொலுஞ் சொல்லினைச்
செம்மையென்று மனத்திடைக் கொள்வதாம்
தீய பக்தி. யியற்கையும் வாய்ந்திலேன்
சிறிதுகாலம் பொறுத்தினுங் காண்பமே. (2)

உலகெ லாமொர் பெருங்கன வஃதுளே
உண்டு றங்கி யிடர்செய்து செத்திடும்
கலக மானிடப் பூச்சிகள் வாழ்க்கையோர்
கனவி னுங்கன வாகு மிதனிடை
சிலதி னங்க ளுயிர்க்கமு தாகியே
செப்பு தற்கரி தாகம யக்குமால்
திலக வாணுத லார்தரு மையலாந்
தெய்வீ சக்கன வன்னது வாழ்கவே! (3)

ஆண்டொர் பத்தினி லாடியு மோடியும்
ஆறு குட்டையி னீச்சினும் பேச்சினும்
ஈண்டு பன்மரத் தேறி யிறங்கியும்
என்னொ டொத்த சிறிய ரிருப்பரால்
வேண்டு தந்தை விதிப்பினுக் கஞ்சியான்
வீதி யாட்டங்க ளேதினுங் கூடிலேன்
தூண்டு நூற்கணத் தோடு தனியனாய்த்
தோழ மைபிறி தின்றி வருந்தினேன். (4)

காதல்

அன்ன போழ்தினி லுற்ற கனவினை
அந்த மிழ்ச்சொலி லெவ்வணஞ் சொல்லுகேன்
சொன்ன தீங்கன வந்து துயிலிடைத்
தோய்ந்த தன்று நனவிடைத் தோய்ந்ததால்,
மென்ன டைக்கனி யின்சொற் கருவிழி
மேனி யெங்கு நறுமலர் வீசிய
கன்னி யென்றுறு தெய்வத மொன்றனைக்
கண்டு காதல் வெறியிற் கலந்தனன். (5)

ஒன்ப தாய பிராயத்த ளென்விழிக்
கோது காதைச் சகுந்தலை யொத்தனள்.
என்ப தார்க்கும் வியப்பினை நல்குமால்
என்செய் கேன்பழி யென்மிசை யுண்டுகொல்?

அன்பெ னும்பெரு வெள்ள மிழுக்குமேல்
அதனை யாவர் பிழைத்திட வல்லரோ?
முன்பு மாமுனி வோர்தமை வென்றவில்
முன்ன மேவிழ்க் குழந்தையென் செய்வனே. (6)

வயது முற்றிய பின்னுறு காதலே
மாசு டைத்தது தெய்விக மன்றுகாண்.
இயலு புன்மை யுடலினுக் கின்பெனும்
எண்ண முஞ்சிறி தேன்றதக் காதலாம்
நய மிருந் தனி மானத மாமணம்
நண்ணு பாலர் தமக்குரித் தாமன்றே
கயல்வி ழிச் சிறு மானினைக் காணநான்
காம னம்புக ளென்னுயிர் கண்டவே. (7)

கனகன் மைந்தன் குமர குருபரன்
கனியு ஞானசம் பந்தன் துருவன்மற்
றெனையர் பாலர் கடவுளர் மீதுதாம்
எண்ணில் பத்திகொண் டின்னுயிர் வாட்டினோர்
மனதிலே பிறந் தோன்மன மூன்றுவோன
மதன தேவனுக் கென்னுயிர் நல்கினன்
மூனமு ரைத்தவர் வான்புகழ் பெற்றனர்
மூட னேன்பெறற் தோதுவன் பின்னரே. (8)

சீரெ டுத்து வருநற் சுவன்மணி
சித்தி லப்புன் னகைசுடர் வீசிடப்
போரெடுத்து வருமதன் முன்செலப்
போகும் வேளை யதற்கிருந் தினந்தோறும்
வேரெ டுத்துச் சுதந்திர நற்பயிர்
வீந்திடச் செய்தல் வேண்டிய மன்னர்தம்
சீரெ டுத்த புலையியற் சாரர்கள்
தேச பக்தர் வாவினைக் காத்தல்போல்,

காத்தி ருந்தவள் போம்வழி முற்றினும்
கண்கள் பின்னமு கார்ந்து களித்திட
யாத்த தேருரு ஊப்பபடு மேமைதான்
யாண்டு தேர்செலு மாங்கிழுப் புற்றெனக்
கோத்த சிந்தையொ டேகி யதில்மகிழ்
கொண்டு நாட்கள் பலகழித் திட்டனென்,
பூத்த ஜோதி வதனந் திரும்புமேற்
புலன ழிகவொரு புத்துயி ரெய்துவேன். (10)

புலங்க ளோடு கரணமு மாவியும்
போந்து நின்ற விருப்புடன் மானிடன்
நலங்க ளேது விரும்புவ னங்கவை
நண்ணு றப்பெறல் திண்ணம தாமென
இலங்கு நூலுணர் ஞானியர் கூறுவர்
யானு மற்றது மெய்யெனத் தேர்ந்துளேன்,
விலங்கி யற்கை யிலையெனில் யாமெலாம்
விரும்பு மட்டினில் விண்ணுற லாகுமே. (11)

சூழு மாய வுலகினிற் காணுறுந்
தோற்றம் யாவையு மானத மாகுமால்,
ஆழு நெஞ்சகத் தாசையின் றுள்ளதேல்
அதனு டைப்பொருள் நாளை விளைந்திடும்.
தாழு முள்ளத்தர், சோர்வினர், ஆடிபோல்
தாவித் தாவிப் பலபொருள் நாடுவோர்
வீழு மோரிடை யூற்றினுக் கஞ்சுவோர்
விரும்பும் யாவும் பெறாரிவர் தாமன்றே? (12)

விதியை நோவர்தம் நண்பரைத் தூற்றுவர்
வெகுளி பொங்கிப் பகைவரை நிந்திப்பர்
சதிகள் செய்குவர் பொய்ச்சாத்திரம் பேசுவர்
சாத கங்கள் புரட்டுவர் பொய்மைசேர்

மதியி னிற்புலை நாத்திகன் கூறுவர்
மாய்ந்தி டாத நிறைந்த விருப்பமே
கதிகள் யாவும் தருமென லோர்ந்திடார்
கண்ணி லாதவர் போலத் திகைப்பர்காண். (13)

கன்னி மீதுறு காதலி னேழையேன்
கவலை யுற்றன கோடியென் சொல்லுகேன்
பன்னி யாயிரங் கூறினும் பக்தியின்
பான்மை நன்கு பகர்ந்திட லாகுமோ?
முன்னி வான்கொம்பிற் றேனுக் குழன்றதோர்
முடவன் கால்கள் முழுமை கொண்டாலென
என்னி யன்றுமற் றெங்ஙனம் வாய்ந்ததோ
என்னி டத்தவ ளிங்கிதம் பூண்டதே, (14)

காத லென்பது மோர்வயி னிற்குமேற்
கடலின் வந்த கடுவினை யொக்குமால்.
ஏத மின்றி யிருபுடைத் தாமெனில்
இன்ன மீர்து மிணைசொல லாகுமோ ?
ஓதொ ணாத பெருந்தவங் கூடினோர்
உம்பர் வாழ்வினை யெள்ளிடும் வாழ்வினோர்
மாத ரார்மிசைத் தாமுறுங் காதலை
மற்ற வர்தரப் பெற்றிடு மாந்தரே. (15)

மொய்க்கு மேகத்தின் வாடிய மாமதி,
மூடு வெம்பனிக் கீழுறு மென்மலர்,
கைக்கும் வேம்பு கலந்திடு செய்யபால்,
காட்சி யற்ற கவினுறு நீள்விழி,
பொய்க்கி ளைத்து வருந்திய மெய்யரோ,
பொன்ன னாருள் பூண்டில ராமெனிற்
கைக்கிளைப் பெயர் கொண்ட பெருந்துயர்க்
காத லஃது கருதவுந் தீயதால். (16)

'தேவர் மன்னன் மிடிமையைப் பாடல்போல்
தீய கைக்கிளை யாரெவன் பாடுதல்?
ஆவல் கொண்ட அரும்பெறற் கன்னிதான்
அன்பெ னக்கக் களித்திட லாயினள்.
பாவந் தீமை பழிபெறுந் தேர்ந்திடோம்
பண்டைத் தேவ யுகத்து மனிதர்போற்
காவல், கட்டு, விதிவழக் கென்றிடுஞ்
சயவர் செய்திக ளேது மறிந்திலேம். (17)

கான கத்தி லிரண்டு பறவைகள்
காத லுற்றது போலவு மாங்ஙனே
வான கத்தி லியக்க ரியக்கியர்
மையல் கொண்டு மயங்குதல் போலவும்
ஊன கத்த துவட்டுற மன்புதா
னொன்று மின்றி யுயிர்களி லொன்றியே
தேன கத்த மணிமொழி யாளொடு
தெய்வ நாட்கள் சிலகழித் தேனரோ. (18)

ஆதி சைத்திரு நாளொன்றிற் சங்கரன்
ஆல யத்தொரு மண்டபந் தன்னில்யான்
சோதி மாதொடு தன்னந் தனியனாய்ச்
சொற்க ளாடி யிருப்பமற் றங்கவள்
பாதி பேசி மறைந்துபின் தோன்றிதன்
பங்கயக் கையில் மைகொணர்ந் தே 'ஒரு
சேதி நெற்றியில் பொட்டு வைப்பேன்' என்றாள்
திலதமிட்டனள். செய்கை யழிந்தனன். (19)

என்னை யீன்றெனக் கைந்து பிராயத்தில்
ஏங்க விட்டுவிண் ணெய்திய தாய்தனை
முன்னை யீன்றவன் செந்தமிழ்ச் செய்யுளால்
மூன்று போழ்துஞ் சிவனடி யேத்துவோன்
அன்னவன் தவப் பூசனை தீர்ந்தபின்
அருச்சனைப் படி தேயமர் கொண்டியான்

பொன்னை யென்னுயிர்த் தன்னை யணுகலும்
பூவை புன்னகை நன்மலர் பூப்பள்காண். (20)

## ஆங்கிலப் பயிற்சி

நெல்லை யூர்சென் றவ்வுணர் கலைத்திறன்
நேரு மாறெனை எந்தை பணித்தனன்
புல்லை யுண்கென வாளரிச் சேயினைப்
போக்கல் போலவும், ஊன்விலை வாணிகம்
நல்ல தென்றொரு பார்ப்பனப் பிள்ளையை
நாடு விப்பது போலவும், எந்தைதான்
அல்லல் மிக்கதோர் மண்படு கல்வியை
ஆரி யர்க்கிங் கருவருப் பாவதை; (21)

நரியு யிர்ச்சிறு சேவகர் தாதர்கள்
நாயெ னத்திரி யொற்றர் உணவினைப்
பெரிதெ னக்கொடு தம்முயிர் விற்றிடும்
பேடி யர்பிறர்க் கிச்சகம் பேசுவோர்
கருது மிவ்வகை மாக்கள் பயின்றிடுங்
கலைப யில்கென வென்னை விடுத்தனன்.
அருமை மிக்க மயிலைப் பிரிந்துமிவ்
வற்பர் கல்வியி னெஞ்சு பொருந்துமோ? (22)

கணிதம் பன்னிரண் டாண்டு பயில்வர்பின்
கார்கொள் வானிலோர் மீனிலை தேர்ந்திலார்
அணிசெய் காவிய மாயிரங் கற்கினும்
ஆழ்ந்தி ருக்கும் கவியுளம் காண்கிலார்
வணிக மும்பொருள் நூலும் பிதற்றுவார்
வாழு நாட்டிற் பொருள்கெடல் கேட்டிலார்
துணியு மாயிரஞ் சாத்திர நாமங்கள்
சொல்லு வாரெட் டுணைபயன் கண்டிலார். (23)

கம்ப னென்றொரு மானிடன் வாழ்ந்ததும்
காளி தாசன் கவிதை புனைந்ததும்

உம்பர் வானத்துக் கோளையு மீனையு
மோர்ந்த ளந்ததொர் பாற்கரன் மாட்சியும்
நம்ப ருந்திற லோடொரு பாணினி
ஞால மீதி லிலக்கணம் கண்டதும்
இம்பர் வாழ்வின் இறுதிகண் டுண்மையின்
இயல் புணர்த்திய சங்கர னேற்றமும், (24)

சேரன் றம்பி சிலம்பை யிசைத்ததும்
தெய்வ வள்ளுவர் வான்மறை செய்ததும்
பார நலிசைப் பாண்டிய சோழர்கள்
பாரளித்ததுந் தர்மம் வளர்த்ததும்
பேரருட் சுடர் வாள்கொண் டசோகனார்
பிழைப டாது புவிதலங் காத்ததும்
வீரர் வாழ்த்த மிலேச்சர்தந் தீயகோல்
வீழ்த்தி வென்ற சிவாஜியின் வெற்றியும், (25)

அன்ன யாவு மறிந்திலர் பாரதத்
தாங்கி லம்பயில் பள்ளியுட் போகுநர்
முன்ன நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டி ருக்குமிந் நாளி னிகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியுந் தேர்கிலார்
பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்
என்ன கூறிமற் றெங்ங னுணர்த்துவேன்
இங்கிவர்க் கென துள்ள மெரியவே. (26)

சூதி லாத வுளத்தின னெந்தைதான்
சூழ்ந்தெ னக்கு நலஞ்செய னாடியே
ஏதிலார் தருங் கல்விப் படுகுழி
ஏறி யுய்தற் கரிய கொடும்பிலம்
தீதி யன்ற மயக்கமும் ஐயமும்
செய்கை யாவினு மேயசி ரத்தையும்
வாதும் பொய்மையு மென்ற விலங்கினம்
வாழும் வெங்குகைக் கென்னை வழங்கினன். (27)

அய்ய ரென்றும் துரையென்று மன்றனைக்
காங்கி லக்கிலை யென்றென் றுணர்ந்தய
பொய்ய ருக்கிது கூறுவன் கேட்பிரால்
பொழுதெ லாமுங்கள் பாடத்திற் போக்கினான்
மெய் யயர்ந்து விழிகுழி யெய்திட
வீறி ழந்தெனை துள்ளநொய் தாகி—
ஐயம் விஞ்சிச் சுதந்திர நீங்கியென்
அறிவு வாரித்து நும்மென் றலைத்ததால். (28)

செலவு தந்தைக்கொ ராயிரஞ் சென்றது
நிதெ னக்குப் பல்லாயிரஞ் சேர்ந்தன.
நலமொ ரெட்டுணை யுங்கண் டிலேனிதை
நாற்ப தாயிரங் கோயிலிற் சொல்லுவேன்
சிலமுன் செய்தன நல்வினை யானுகை
தேவி பாரதத் தன்னை யருளினும்
அன்னவு றந்து நும் பேரருள் வீழ்ந்துதான்
அழிகதிடமொரு வாறு பிழைத்ததே. (29)

## மணம்.

நினைக்க நெஞ்ச முருகும் பிறர்க்கிதை
நிகழ்ந்த தாகவி கூசம தன்றியே
எனைத்தின் கென்னனி வாத்திய ர்விடர்
யாருடன் மாற்றவ தென்பது மோர்த்திலம்
அனைத்தொர் கேட்டிமற் றேதெனிற் கூறுவன்
அம்ம மாக்கள் மணமெனுஞ் செய்தியே
வினைத் தொடர்களில் மானுட வாழ்க்கையுள்
மேவு மிம்மணம் போற் பிறிதின்றரோ. (30)

வீடு றுவணம் பாப்பதை விட்டென்பார்
மிக விழிந்த பொருளைப் பொருளென்பார்
காமின் காதலொர் மணமற்ற செய்கையை
நல்லதோர் மண மாமென காட்டுவார்.

கூடி மாயிற் பிரம சரியங்கொள்,
கூடுகின்றில தென்னிற் பிழைகள்செய்
தீட்டழிந்து நரகவழி செல்வாய்,
யாது செய்யினு மிம்மணஞ் செய்யக்காண் (31)

வசிட்ட னுக்கு பிரமற்கும் பின்னொரு
வள்ளு வர்க்குமுன் வாய்த்திட்ட மாதர்போல்
பசித்தொ ராயிர மாண்டுதவஞ் செய்து
பார்க்கி னும்பெறல் சால வரிதுகாண்,
புசிப்ப தும்பரி னல்லமு தென்றெணிப்
புலையர் விற்றிடுங் கள்ளுணை லாகுமோ?
அசுத்தர் சொல்வது கேட்கலிர், ஈனர்நீர்
ஆண்மை வேண்டின் மணஞ்செய்த லோம்புமின். (32)

வேறு தேயத் தெவரது செய்யினும்
வீழ்ச்சி பெற்றவிப் பாரத நாட்டினில்
ஊறழிந்து பிணமென வாழுமிவ்
வூன நீசக விருப்பு லையர்தாம்
கூறு மெந்தத் துயர்கள் விளையினும்
கோடி மக்கள் பழி வந்து சூழினும்
நீறு பட்ட விப் பாழுஞ்செயல் மட்டினும்
நெஞ்சத் தாலு நினைப்ப தொழிகவே. (33)

பால ருக்கு மதலையர் தம்மையே
பாத கக்கொடும் பாதகப் பாதகர்,
மூலைத் தோடு முலைசெடல் நாடிய
மூட மூடர்கா. மூடப் புலையர்தாம்
கோலமாக மணத்திடைக் கட்டுமிக்
கொலையை யுஞ்செய லொன்றினை யுள்ளவும்
சால வின்னுமோ ராயிர மாண்டுவர்,
தாத ராகி யழிகெனத் தோன்றுமே. (34)

ஆங்கொர் கன்னியைப் பத்துப் பிராயத்தில்
ஆழ நெஞ்சிடை யூன்றி வணங்கினன்
ஈங்கொர் கன்னியைப் பன்னிரண் டாண்டனுள்
எந்தை வந்து மணம்புரி வித்தனன்.
தீங்கு மற்றிதி லுண்டென் றறிந்தவன்
செய லெதிர்க்குந் திறனில னாயினேன்.
ஓங்கு காதற் றழலெவ் வளவென்றன்
உளமெ ரித்துள தென்பதுங் கண்டிலேன். (35)

மற்றொர் பெண்ணை மணஞ் செய்த போழ்துமுன்
மாத ராளிடைக் கொண்டதோர் காதல்தான
நிற்றல் வேண்டு மென வுளத் தெண்ணிலேன்
நினைவை யேயிம் மணத்திற் செலுத்தினேன்
முற் றொடர்பிணி யுண்மை யிருந்ததால்
மூண்ட பின்னதோர் கேளியென் றெண்ணினேன்
சற்றுங் கேட்டு மறிவு முதிருமுன்
காத லொன்று கடமை யொன் றாயினன். (36)

மதனன் செய்யு மயக்க மொருவயின்
மாக்கள் செய்யும் பிணிப்புமற் றோர்வயின்
இதனிற் பன்னிரண் டாட்டை யிளைஞனுக்
கென்னை வேண்டு மிடர்க்கறு சூழ்ச்சிதான்
எதனி லேனுங் கடமை விளையுமேல்
எத்து யர்க ளுழன்று மற் றென்செய்தும்
அதனி லுண்மையொ டார்த்திடல் சாலுமென்
றறம் விதிப்பது மப்பொழு தோர்ந்திலன். (37)

சாத்தி ரங்கள், கிரியைகள் பூசைகள்,
சகுன மந்திரந் தாலி மணியெலாம்
யாத்தெனைக் கொலை செய்தன ரல்லது
[illegible]து தார்ய முறையெனல் காட்டிலர்

தீத்தி ரன்கொள றிவற்ற பொய்ச்செயல்
செய்து மற்றவை ஞானநெறி யென்பர்
மூத்த வர்வெறும் வேடத்தி னிற்குங்கால்
மூடப் பிள்ளை யறமெவ னோர்வதே? (38)

## தந்தை வறுமையெய்திடல்

ஈங்கிதற் கிடை யெந்தை பெருந்துயர்
எய்தி நின்றனன் தீய வறுமையான்,
ஓங்கி நின்ற பெருஞ்செல்வம் யாவையு
மூணர் செய்த சதியி லிழந்தனன்.
பாங்கி னின்று புகழ்ச்சிகள் பேசிய
பண்டை நண்பர்கள் கைநெகிழ்த் தேகினர்
வாங்கி யுய்ந்த கிளைஞருந் தாதரும்
வாழ்வு தேய்ந்தபின் யாது மதிப்பரோ. (39)

பார்ப்பனக் குலங் கெட்டழி வெய்திய
பாழ டைந்த கலியுக மாதலால்
வேர்ப்ப வேர்ப்பப் பொருள்செய்வ தொன்றையே
மேன்மை கொண்ட தொழிலெனக் கொண்டனன்
ஆர்ப்பு மிஞ்சப் பலபல வாணிகம்
ஆற்றி மிக்க பொருள்செய்து வாழ்ந்தனன்
நீர்ப்படுஞ் சிறு புற்புத மாமது
நீங்க வேயுளங் குன்றித் தளர்ந்தனன். (40)

தீய மாய வுலகிடை யொன்றினில்
சிந்தை செய்து விடாயுறுங் காவலை
ஏய டங்கமென் மேலும் பருகினும
மாயத் தாகந் தவிர்வது கண்டிலம்.
மேய முற்றது வந்து மிகமிக
நித்த லும்மதற் காசை வளருமால்
காய முள்ள வரையுங் கிடைப்பினும்
கயவர் மாய்வது காய்ந்த வுளங்கொண்டே. (41)

"ஆசைக் கோரளவில்லை" விடயத்தின்
ஆழ்ந்த பின்னுங் கணமதி யுண்டாமென
மோசம் போகலிர் என்றிடித் தோதிய
மோனி தாளிணை முப்பொழு தேத்துவாம்.
தேசத்தார் புகழ் நுண்ணெறி வோர்தான்
திண்மை விஞ்சிய நெஞ்சின ராயினும்
நாசக் காசினி லாசையை நாட்டினர்
நல்ல னெந்தை துயர்க்கடல் வீழ்ந்தனன். (42)

பொருளி லார்க் கிலை யிவ்வுல கென்றநம்
புலவர் தம்மொழி பொய்ம்மொழி யன்றுகாண்
பொருளிலார்க் கின மில்லை துணை யிலை,
பொழுதெலா மிடர் வெள்ளம்வந் தெற்றுமால்
பொருளி லார் பொருள் செய்தல் முதற்கடன்
போற்றிக் காசினுக் கேங்கி யுயிர்விடும்
மருளர் தம் மிசை யேபழி கூறுவன்,
யாடிகட் கிங் கொருவனை முனைத்திலன். (43)

அற மொன்றே தரு மெய் யின்ப மென்றநல்
லறிஞர்* தம்மை யனுதினம் போற்றுவேன்
பிற விரும்பி யுலகினில் யான் பட்ட
பீழை யெத்தனை கோடி! நினைக்கவும்
திற னழிந்தென் மனமுடை வெய்துமால்
தேசத் துள்ள இளைஞ ரறிமினோ!
அறமொன் றேதரு மெய்யின்ப மாதலால்
அறனை யேதுணை யென்றுகொண் டுய்திரால். (44)

---

* வள்ளுவர்

வெய்ய கர்மப் பயன்களி னோர்ந்திடான்
மெய்யு ணர்ந்திட லாகுமென் றோதிய
தெய்வமே யிது நீதி யெனினுநின்
திருவ ருட்குப் பொருந்திய தாகுமோ?
ஐய கோ! சிறு துணைமை விளங்குமுன்
ஆவி யையத் துயருறல் வேண்டுமே!
பையப் பையவொ ராண்மைகுன் றேறல்போற்
பாருளோ ருண்மை கண்டிவ ணுய்வரால். (45)

தந்தை போயினன், பாழ்மிடி சூழ்ந்தது
தரணி மீதினி லஞ்சலென் பாரிலர்
சிந்தையிற் றெளி வில்லை, உடலினில்
திறனு மில்லை, யுரனுளத் தில்லையால்
மந்தர் பாற் பொருள் போக்கிப் பயின்றதாம்
மடமைக் கல்வியில் மண்ணும் பயனிலை
எந்த மார்க்கமுந் தோற்றில தென்செய்வேன்
ஏன் பிறந்தன னித்துயர் நாட்டிலே? (46)

## முடிவுரை

உலகெலா மோர் பெருங்கன வஃதுளே
யுண்டு றங்கி யிடர் செய்து செத்திடும்
கலக மானிடப் பூச்சிகள் வாழ்க்கையோர்
கனவி லுங் கன வாகு மிதனிடை
பல நினைந்து வருந்தியிங் கென் பயன்?
பண்டு போனதை யெண்ணி யென்னாவது?
சிலதி னங்க ளிருந்து மறைவதிற்
சிந்தை செய்தெவன் செத்திடு வானடா! (47)

ஞானமுந் துறவும் பெற்றி லாதவர்,
நானிலத்துந் துயரன்றிக் காண்கிலர்,

போனதற்கு வருந்திலன், மெய்த் தவப்
புலமை யோனது வானத் தொளிரு மோர்
மீனை நாடி வளைத்திடத் தூண்டிலை
வீச லொக்கு மென்னை மறக்கிலேன்
ஆன தாவ தனைத்தையுஞ் செய்ததோர்
அன்னையே யினியேனு மருள்வையால். (48

வேறு.

அறிவிலே தெளிவு நெஞ்சிலே யுறுதி
யகத்திலே யன்பினோர் வெள்ளம்
பொறிகளின் மீது தனியர சாணை
பொழுதெலா மினது பே ரருளின்
நெறியிலே நாட்டம் கருமயோகத்தி
னிலைத்திட வென்றிவை யருளாய்
குறிகுண மேது மில்லதா யனைத்தாய்க்
குலவிடு தனிப்பரம் பொருளே.

முற்றும்.

## குறிப்பு.

பின்வரும் புத்தகங்கள் அடியிற்கண்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்க.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| கனவு.................... | 0 | 4 | 0 |
| ஆறில்லொருபங்கு........ | 0 | 3 | 0 |
| ஜன்மபூமி.............. | 0 | 3 | 0 |

ஆவுடையக்காள் "வித்தை சோபனம்"

0—2—0

விலாசம்:—

சி. சுப்பிரமணிய பாரதி,

பால பாரத ஆபீஸ்,

புதுச்சேரி.

23/8/82
Rep(S)

19.5.83
1019
8-8.83
Rep(S)

1-7-86
1019

27-9-91
[illegible]

29/12/2012
Rep(S) 98 (1)